ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2264/18 – 2022 ජනවාරි මස 27 වැනි බ්‍රහස්පතින්දා – 2022.01.27
2264/18 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 4/81 (X)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டம்**

23அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர ஆகிய நான் மேற்சொல்லப்பட்ட பிரிவின் கீழ் உரிமமொன்றைத் தேவைப்படுத்துகின்றவையும், மாசை விளைவிக்கும் வகையில் சூழலினுள் கழிவை வெளியேற்றுதல், கொட்டுதல் அல்லது வெளியாக்குதல் என்பவற்றை சம்பந்தப்படுத்தும் அல்லது விளைவிக்கும் செயற்பாடுகளாயிருப்பவையுமான செயற்பாடுகளாக இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள செயற்பாடுகளை இக்கட்டளையால் தீர்மானிக்கின்றேன்.

**மஹிந்த அமரவீர,**
அமைச்சர்.

கொழும்பு,
2022, சனவரி 18.

**அட்டவணை**

விதித்துரைக்கப்பட்ட எந்தச் செயற்பாடுகளுக்கு உரிமம் ஒன்று தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தச் செயற்பாடுகள்

**பாகம் அ**

1. இரசாயனப்பொருள்/உரம்/பீடை கொல்லிகள் (பூச்சிகொல்லிகள், பூஞ்சன கொல்லிகள், களைக் கொல்லிகள் முதலியன) உற்பத்திசெய்யும் அல்லது வகுத்தமைக்கும் கைத்தொழில்கள்.

1A – PG5737 – 10,010 (2022/01)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. நாளொன்றிற்கு 1000 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தித்திறன் கொண்ட சவர்க்காரங்கள், அழுக்கு நீக்கிகள், மென்மையாக்கிகள் அல்லது வேறு எவையேனும் சுத்திகரிப்பு தயாரிப்புகள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

3. நாளொன்றிற்கு 100 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தித்திறன் கொண்ட செயற்கை இறப்பர், இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் அல்லது பதனிடும் அல்லது இறப்பர் அடிப்படையிலான கைத்தொழில்கள் அல்லது மணியிழை புகையூட்டிய இறப்பர் படைதட்டு உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

4. எண்ணெய் (கனிப்பொருள் எண்ணெய் அல்லது பெற்றோலியம்) சுத்திகரிப்பு நிலையங்கள்.

5. 5000 தொன்கள் அல்லது அதற்கு மேற்பட்ட களஞ்சியப்படுத்துகை கொள்ளளவு கொண்ட நிலக்கரி களஞ்சியப்படுத்துகை சாலைகள் அல்லது நிலக்கரி அடிப்படையிலான இரசாயன உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்வதில் அல்லது நிலக்கரி பதனிடுவதில் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள்.

6. செயலூக்கப்பட்ட கார்பன் அல்லது கார்பன் கரி உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.

7. சாயம் மற்றும் சாய இடைநிலைகள் உற்பத்தி செய்யும் அல்லது வகுத்தமைக்கும் கைத்தொழில்கள்.

8. தீந்தைகள் (பால்மம் அல்லது கனிமப்பூச்சு) மைகள், நிறப்பொருட்கள், வாணிசு மற்றும் மெருகு உற்பத்திசெய்யும் அல்லது வகுத்தமைக்கும் கைத்தொழில்கள்.

9. பெற்றோலிய இரசாயனப்பொருள் (அடிப்படை அல்லது இடைநிலைகள்) உற்பத்திசெய்யும் அல்லது வகுத்தமைக்கும் கைத்தொழில்கள்.

10. கைத்தொழில் வாயு உற்பத்திசெய்யும் அல்லது பதனிடும் அல்லது மீள்நிரப்பும் கைத்தொழில்கள்.

11. நிலக்கீழ் பொறித்தொகுதிகள்.

12. எல்லாவகையினதான டயர்கள் அல்லது டியூப்கள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

13. மின்கலங்களை உற்பத்திசெய்வதில் அல்லது மறுசீரமைப்பதில் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள்.

14. அஸ்பெஸ்ரசு இழையங்களை மூலப்பொருள் ஒன்றாகப் பயன்படுத்தும் கைத்தொழில்கள்.

15. புடவை செய்முறைப்படுத்தல் (வெளிறச்செய்தல், சாயமிடுதல், அச்சிடுதல் உள்ளடங்கலாக) கைத்தொழில்கள் அல்லது தைத்த ஆடை கழுவும் கைத்தொழில்கள் அல்லது புடவை மணற்பீச்சுக் கைத்தொழில்கள்.

16. ஈரப்பதனீட்டுத் தொழிற்பாடுகளைக் கொண்ட தோல்பதனிடும் இடங்கள் அல்லது தோல்பதனிடும் அல்லது முடிவுறும் கைத்தொழில்கள்.

17. நொதித்தல் கைத்தொழில்கள் (வடிசாலைகள், வடிப்பாலைகள் முதலியன)

18. உடன் தேயிலை அல்லது கோப்பி பதனிடும் கைத்தொழில்கள்.

19. மின்முலாம் பூசுதல், நாகமுலாம் பூசுதல் மற்றும் தூள் முலாமிடும் கைத்தொழில்கள் உள்ளடங்கலாக உலோகம் அல்லது பிளாஸ்டிக்கின் மேற்பரப்புப்பரிகரிப்பில் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள்.

20. கொல்லன் பட்டறைகள் நீங்கலாக இரும்பு மற்றும் உருக்கு ஆலைகள்.

21. இரண்டாந்தர பதனிடுகைகள், உலோகங்களை உருக்குதல் மற்றும் மீட்டல் உள்ளடங்கலாக இரும்புசாரா உலோகம் பதனிடும் அல்லது பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.

22. சீமெந்து கைத்தொழில்கள் (கிளிங்கர் அரைத்தல் அல்லது உற்பத்திசெய்தல் அல்லது மீள்பொதியிடல்).

23. கண்ணாடி உருக்குதலுடன் கண்ணாடி உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

24. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள, மட்பாண்டக் கைத்தொழில்கள்.

25. பல்துளை தகர்ப்புடனான இயந்திரமயமாக்கப்பட்ட சுரங்கச்செயற்பாடுகள்.

26. தன்னியக்க மோட்டார் வாகனம் அல்லது முச்சக்கர வண்டி அல்லது மோட்டார் சைக்கிள்கள் அல்லது சைக்கிள்கள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

27. தயார் நிலையிலுள்ள மின்பிறப்பாக்கிகள் மற்றும் நீர் அல்லது சூரிய அல்லது காற்று மின்சக்தி பொறித்தொகுதிகள் நீங்கலாக மின்சக்திப் பிறப்பாக்கிப் பயன்பாடுகள்.

28. கையினால் செய்யப்பட்ட கடதாசி அல்லது கடதாசி அடிப்படையிலான அலங்காரப் பொருட்கள் நீங்கலாக கடதாசி மற்றும் கடதாசிக் கூழ் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.

29. கைத்தொழில் வலயங்கள்/கைத்தொழில் தோட்டங்கள்/ஏற்றுமதி செய்முறைப்படுத்தல் வலயங்களின் வெளிப்பகுதியில் அல்லது உட்பகுதியில் அமைந்துள்ள பொது கழிவுப்பரிகரிப்பு வசதிகள் மற்றும் முகாமைத்துவ செயலிடங்கள்.

30. பொறிமுறையில் துருவை அகற்றுதல் உள்ளடங்கலாக கப்பல் கட்டுதல் கைத்தொழில்கள் மற்றும் பழுதுபார்த்தல் கைத்தொழில்கள்.

31. மீன்பிடித் துறைமுகங்கள் நீங்கலாக எல்லாத் துறைமுகங்களும்.

32. எல்லா சர்வதேச விமானநிலையங்களும்.

33. அட்டவணையின் பாகம் அ இல் உள்ளடங்காத எந்தச் செயற்பாடு/கைத்தொழில் அதன் உற்பத்திச் செய்முறையில் நாளொன்றிற்கு 40 கனமீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட கொள்ளளவில் கழிவு நீரை வெளியேற்றுகின்றதோ அந்த ஏதேனும் செயற்பாடு/கைத்தொழில்.

**பாகம் ஆ**

1. இரசாயனப்பொருள்/உரம்/பீடைகொல்லிகள் (பூச்சி கொல்லிகள்/பூஞ்சண கொல்லிகள், களைக் கொல்லிகள் முதலியன) மீள்பொதியிடும் கைத்தொழில்கள் அல்லது வர்த்தக நோக்கங்களுக்காக இரசாயனப் பொருள்/உரம்/பீடைகொல்லிகளின் (பூச்சி கொல்லிகள்/பூஞ்சன கொல்லிகள், களைக் கொல்லிகள் முதலியன) பேரளவிலான களஞ்சியப்படுத்துகைகள்

2. நூற்றியைம்பது மெற்றிக்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கொள்ளளவு கொண்ட பேரளவிலான பெற்றோலிய திரவ அல்லது திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு (எல்.பி வாயு) களஞ்சியப்படுத்துகை அல்லது நிரப்பும் வசதிகள், அத்துடன் திரவமாக்கப்பட்ட எல்லா பெற்றோலிய வாயு (எல் பி வாயு) நிரப்பும் வசதிகளும்.

3. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள கண்ணாடியிழையை மூலப்பொருள் ஒன்றாகப் பயன்படுத்துவதில் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள்.

4. தொகுதியொன்றுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மெற்றிக்தொன் உற்பத்தித்திறன் கொண்ட மரக்கரி உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

5. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள, ஆயுர்வேத அல்லது சுதேச மருந்து உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்வதில் அல்லது பிரித்தெடுப்பதில் அல்லது வகுத்தமைப்பதில் சம்பந்தப்பட்டுள்ள கைத்தொழில்கள்.

6. கைத்தொழில் வாயு களஞ்சியப்படுத்துகைகள்.

7. பல்படிமங்கள் அல்லது பல்படிமங்கள் அடிப்படையிலான உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்வதில் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள் (அதாவது பொலிஎதைலீன், பொலிவினைல் குளோரைட் (பிவீசீ), பொலியுர்தீன், பொலிபுரொபைலின், பொலியெஸ்ரர், நைலோன், பொலிஸ்ரரின், மரப்பிசின், கண்ணாடியிழை அல்லது மனிதனால் செய்யப்பட்ட வேறு இழைகள் முதலியன).

8. டயர் தேய்வுகளை புதுப்பிக்கும் அல்லது மீளகட்டமைக்கும் கைத்தொழில்கள்.

9. ஐநூறு மெற்றிக்தொன் அல்லது அதற்கு மேற்பட்டதும் 5000 மெற்றிக்தொன்களுக்கு குறைந்ததுமான களஞ்சியப்படுத்துகைக் கொள்ளளவைக் கொண்ட நிலக்கரி களஞ்சியப்படுத்துகை சாலைகள்.

10. இடைநிலைகள் உட்பட மருந்தாக்கங்களை அல்லது ஒப்பனைப்பொருட்களை உற்பத்திசெய்தல் அல்லது பிரித்தெடுத்தல் அல்லது வகுத்தமைத்தலுடன் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள் (ஆயுர்வேத மற்றும் சுதேச மருந்து உற்பத்திப்பொருட்கள் நீங்கலாக)

11. இயற்கைப் பசைகள் புறநீங்கலாக ஒட்டுப்பிசின்களை உற்பத்திசெய்யும் அல்லது மீளப் பொதியிடும் கைத்தொழில்கள்.

12. வெடிபொருட்கள் உற்பத்திசெய்யும் அல்லது வகுத்தமைக்கும் கைத்தொழில்கள் அல்லது தீக்குச்சிகள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

13. மாதம் ஒன்றிற்கு 1000 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட வெடிபொருட்கள் பயன்படுத்தப்படுகின்ற, பட்டாசுகள் உள்ளடங்கலாக வானவெடிகள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

14. அழுக்கு நீக்கிகள் அல்லது வேறு இரசாயனப்பொருட்களைப் பயன்படுத்தும் வர்த்தகத்தை அடிப்படையாகக்கொண்ட போத்தல் கழுவும் கைத்தொழில்கள்.

15. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற பற்றிக் (சாயமிடல்) கைத்தொழில்கள்.

16. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற அல்லது துப்பரவு செய்யும் திறன் நாளொன்றிற்கு 50 கிலோகிராமிற்கு (உலர்ந்த துணிகள்) மேற்பட்டதாகவிருக்கின்ற வர்த்தக சலவைக்கூடங்கள்.

17. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற இயற்கை இழையத்தை செய்முறைப்படுத்துதல், வெளிறச் செய்தல் அல்லது சாயமூட்டுதலுடன் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள் அல்லது இயற்கை இழையத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்.

18. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட இயந்திரங்களைக் கொண்ட மின் தறிகள் அல்லது பின்னல் அல்லது சித்திரத் தையல் தொழிற்சாலைகள் மொறு மொறுப்பூட்டும் செயற்பாடுகளுடனான சக்தி தறிகள்.

19. சீனி உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள் அல்லது சீனி சுத்திகரிப்பு நிலையங்கள்.

20. மதுசாரம் சேர்ந்த பானங்களை உற்பத்திசெய்யும் அல்லது போத்தலில் அடைக்கும் பொறித்தொகுதிகள்.

21. ஐம்பது அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற சிகரட்டுக்கள் அல்லது புகையிலையை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திப்பொருட்களை உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

22. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற உணவு உற்பத்தி செய்யும் அல்லது பதனிடும் கைத்தொழில்கள்.

23. ஆயிரம் கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட நாளாந்த மாவு உள்ளீட்டு திறன்கொண்ட வெதுப்பகங்கள் அல்லது இனிப்புப்பண்ட தயாரிப்பிடங்கள்.

24. விலங்கறு மனைகள் அல்லது வர்த்தக மட்ட இறைச்சி பதனிடும் கைத்தொழில்கள்

25. நாளொன்றிற்கு 1000 அல்லது அதற்கு மேற்பட்ட லீற்றர் உற்பத்தித்திறன் கொண்ட தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.

26. தேங்காய் எண்ணெய் பிரித்தெடுத்தல் அல்லது ஆயுர்வேத எண்ணெய் பிரித்தெடுத்தல் புறநீங்கலாக நாளொன்றிற்கு 30 அல்லது அதற்கு மேற்பட்ட லீற்றர் உற்பத்தித்திறன் கொண்ட தாவர எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.

27. நாளொன்றிற்கு 30 அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தித்திறன் கொண்ட விலங்கு எண்ணெய்/கொழுப்பு பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.

28. நாளொன்றிற்கு 500 அல்லது அதற்கு மேற்பட்ட லீற்றர் உற்பத்தித்திறன் கொண்ட மதுசாரம் சேராத பானங்கள் உற்பத்தி செய்யும் அல்லது போத்தலில் அடைக்கும் கைத்தொழில்கள்.

29. உலர் தேங்காய் ஆலைகள் அல்லது தேங்காய் பதனிடும் கைத்தொழில்கள்.

30. நாளொன்றிற்கு 5000 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தித்திறனுடன் ஈரப்பதனிடுதல் கொண்ட அரிசி ஆலைகள்.

31. நாளொன்றிற்கு 500 அல்லது அதற்கு மேற்பட்ட கோழி முட்டைகள் குஞ்சு பொரிக்கப்படுகின்ற எல்லா குஞ்சு பொரிப்பகங்களும்.

32. எச்சந்தர்ப்பத்திலும் 2500 அல்லது அதற்கு மேற்பட்ட முதிர்ச்சியடைந்த பறவைகளைக் கொண்ட கோழிப்பண்ணைகள்

33. எச்சந்தர்ப்பத்திலும் 50 அல்லது அதற்கு மேற்பட்ட முதிர்ச்சியடைந்த விலங்குகளைக்கொண்ட பன்றிப் பண்ணைகள் அல்லது மாட்டுப் பண்ணைகள்.

34. எச்சந்தர்ப்பத்திலும் 250 அல்லது அதற்கு மேற்பட்ட முதிர்ச்சியடைந்த விலங்குகளைக்கொண்ட ஆட்டுப் பண்ணைகள்.

35. எச்சந்தர்ப்பத்திலும் 2500 அல்லது அதற்கு மேற்பட்ட மொத்தத்தைக் கொண்ட கலவன் பண்ணைகள். *கலவன் பண்ணைக்கான தரப்படுத்துகை = கோழிகளின் எண்ணிக்கை + [50 x (பன்றிகளின் எண்ணிக்கை + மாடுகளின் எண்ணிக்கை)] + 10 x (ஆடுகளின் எண்ணிக்கை)]

36. நாளொன்றிற்கு 25 அல்லது அதற்கு மேற்பட்ட மெற்றிக்தொன் உற்பத்தித்திறன் கொண்ட விலங்குத்தீனி உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

37. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்றவிடத்து உலைகளுடனான வார்ப்பகங்கள்

38. உலோக வடிவமைப்புக் கைத்தொழில்கள் அல்லது இயந்திரங்கள் அல்லது இயந்திரப் பாகங்கள் அல்லது வன்பொருள் பொருட்கள் அல்லது மின் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் மற்றும் சாதனங்கள் உற்பத்திசெய்யும் அல்லது பொருத்தி உருவாக்கும் கைத்தொழில்கள்.

39. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்றவிடத்து இயந்திரங்கள் பழுதுபார்க்கும் கைத்தொழில்கள்

40. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற கடைசல் பட்டறைகள் அல்லது காய்ச்சிப் பொருத்துப் பட்டறைகள் அல்லது தீந்தை தெளிக்கும் கைத்தொழில்கள்.

41. நாளொன்றிற்கு 500 கனமீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட கனமீற்றர் உற்பத்தித்திறன் கொண்ட கொங்கிறீற்று தொகுதியிடும் பொறித்தொகுதிகள்.

42. மாதமொன்றிற்கு 500 அல்லது அதற்கு மேற்பட்ட கனமீற்றர் உற்பத்தித்திறன் கொண்ட ஒற்றைத்துளை தகர்ப்புடைய இயந்திரமயமாக்கப்பட்ட சுரங்கச் செயற்பாடுகள்.

43. சுண்ணாம்புச் சிப்பி மற்றும் கருங்கல் உடைக்கும் செயற்பாடுகள் நீங்கலாக உலோகம் சாராத கனிப்பொருட்களை உடைத்தல் அல்லது பதனிடுதல் (உதாரணம்: சுண்ணக்கற்கள், தொலமைற்று, அப்பரைட், பாறைப் பொசுபேற்று, மணக்கல், களிக்கல், படிகம், இல்மனைற்று, ஊரூற்றைல், சேர்கொன், மைக்கா, காரீயம், கயோலின் முதலியன)

44. கிரனைட் பாறைக்கற்கள் ஆக்குதல் அல்லது செய்முறைப்படுத்தல் கைத்தொழில்கள் (பிரித்தெடுத்தல், தகர்த்தல், துண்டுதுண்டாக்கல், மெருகேற்றல்)

45. நாளொன்றிற்கு 25 அல்லது அதற்கு மேற்பட்ட கனமீற்றர் உற்பத்தித்திறனைக் கொண்ட கருங்கல் உடைக்கும் கைத்தொழில்கள்.

46. பொதுக் கழிவுநீர் (கைத்தொழில்சார் அல்லது கழிவுநீர்) பரிகரிப்பு பொறித்தொகுதிகள்.

47. நாளொன்றிற்கு 5 அல்லது அதற்கு மேற்பட்ட மெற்றிக்தொன் ஊட்டல் திறன் கொண்ட எரிசூளைகள்.

48. நாளொன்றிற்கு 10000 அல்லது அதற்கு மேற்பட்ட கனமீற்றர் பரிகரிப்புத் திறன்கொண்ட குடிநீர் பரிகரிப்பு பொறித் தொகுதிகள்.

49. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட மெற்றிக்தொன் நாளாந்த உள்ளீட்டுத் திறன்கொண்ட மாநகர திண்மக்கழிவு மற்றும் வேறு திண்மக்கழிவை உரமாக்கும் பொறித்தொகுதிகள்.

50. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட மெற்றிக்தொன் நாளாந்த உள்ளீட்டுத் திறன்கொண்ட திண்மக்கழிவு மீள்பயன்பாடு (பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளடங்கலாக) அல்லது மீள் உருவாக்கம் அல்லது பதனிடும் பொறித்தொகுதிகள்.

51. எடையில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட மெற்றிக்தொன் நாளாந்த கழிவகற்றும் திறன்கொண்ட திண்மக்கழிவு அகற்றல் வசதிகள் அல்லது தளங்கள்.

52. எல்லா நச்சுத்தன்மையான மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவகற்றல் அல்லது மீள்பயன்பாடு அல்லது மீளுருவாக்கம் அல்லது களஞ்சிப்படுத்துகை வசதிகள்.

53. போரோன் பரிகரிப்பு நீங்கலாக இரசாயனப் பரிகரிப்பு மற்றும் மரக்கட்டையை பேணிக்காத்தலுடன் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள்.

54. நாளொன்றிற்கு 50 அல்லது அதற்கு மேற்பட்ட கனமீற்றர் ஆலைத் திறன்கொண்ட மர ஆலைகள் அல்லது இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற மரக்கட்டை அடிப்படையிலான கைத்தொழில்கள்.

55. எல்லா ஒட்டுப்பலகை உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

56. இருபது அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளைக் கொண்ட வதிவிட ஹோட்டல்கள் அல்லது உணவு விடுதி அல்லது விருந்தினர் இல்லங்கள் அல்லது ஓய்வில்லங்கள்.

57. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற வதிவிட வசதிகள் இன்றிய ஹோட்டல்கள் அல்லது உணவு விடுதிகள் அல்லது வரவேற்பு மண்டபங்கள் அல்லது 50 அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற உணவு தயாரிக்கும் இடங்கள் அல்லது உணவு பரிமாறுதல் சேவைகள்

58. நாளொன்றில் இருப்பாட்சி மட்டம் 200 அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களாகவிருக்கின்ற விடுதிகள் அல்லது அதனையொத்த வசிப்பிடங்கள்

59. மருத்துவ ஆய்வுகூடங்கள் அல்லது வைத்தியசாலைகள் அல்லது மருத்துவ ஆராய்ச்சி நிலையங்கள்

60. தன்னியக்க மோட்டார் வாகனம் அல்லது முச்சக்கர வண்டி அல்லது மோட்டார் சைக்கிள்கள் அல்லது சைக்கிள்கள் பொருத்தி உருவாக்கும் கைத்தொழில்கள்

61. முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் பராமரிப்பு மற்றும் உள்ளகச் சுத்திகரிப்பு நீங்கலாக வாகனப் பராமரிப்பு நிலையங்கள் அல்லது வாகனப் பராமரிப்பு செயற்பாடுகளைக் கொண்ட கொள்கலன் சாலைகள்.

62. பராமரிப்பு செயற்பாடுகள் இடம்பெறுகின்ற எல்லா பஸ்சாலைகள் அல்லது புகையிரத வேலைத்தளங்கள் அல்லது விமானப் பேணுகை சாலைகள்.

63. எல்லா வாகனக்கழிவு வெளிப்பாடுகளின் சோதனை நிலையங்கள்.

64. மூன்று மெகாவோல்ட் அல்லது அதற்கு மேற்பட்ட மொத்த மின்சார உற்பத்தித்திறன் கொண்ட எல்லா நீர் மின்சக்தி நிலையங்கள் அல்லது வளிச்சக்தி பொறித்தொகுதிகள்.

65. ஈயம் உருக்குதலுடனான அல்லது செய்தித்தாள் அச்சிடலுடனான அல்லது கழிவுநீரை உண்டுபண்ணும் அச்சுச் செய்முறையுடனான அச்சகங்கள்

66. கடதாசி உற்பத்திப்பொருட்கள் அல்லது நெளிவு அட்டைப் பெட்டிகளை உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்

67. விலங்கியல் பூங்காக்கள் அல்லது விலங்கு மருத்துவமனைகள் அல்லது விலங்கு காட்சிப்படுத்தும் நிலையங்கள்

68. தொலைத்தொடர்பு அல்லது ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புக்காக வசதிகளை வழங்கும் தொடர்பாடல் கோபுரங்கள்.

69. பூச்சிக் கட்டுப்பாட்டுச் சேவைகள்

70. வேலைமாற்றம் ஒன்றிற்கு 200 அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற அட்டவணையின் பாகம் ஆ இல் உள்ளடக்கப்படாத ஏதேனும் செயற்பாடு/கைத்தொழில்

71. அட்டவணையின் பாகம் ஆ இல் உள்ளடக்கப்படாத ஏதேனும் செயற்பாடு/கைத்தொழிலின் உற்பத்திச் செய்முறையில் நாளொன்றிற்கு 10 கனமீற்றர் அல்லது அதற்கு மேற்பட்டதும் 40 கனமீற்றருக்கு குறைந்ததுமான கொள்ளளவைக் கொண்ட கழிவுநீரை வெளியேற்றும்அத்தகைய ஏதேனும் செயற்பாடு/கைத்தொழில்.

**பாகம் இ**

1. நாளொன்றுக்கு 1000 கிலோகிராமுக்குக் குறைவான உற்பத்தித் திறன்கொண்ட சவர்க்காரங்கள், அழுக்கு நீக்கிகள், மென்மையாக்கிகள் அல்லது வேறு எவையேனும் சுத்திகரிப்புத் தயாரிப்புக்களை உற்பத்திசெய்கின்ற அல்லது வகுத்தமைக்கின்ற கைத்தொழில்கள்.

2. வாகன எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளடங்கலாக 150 மெற்றிக்தொன் மொத்த களஞ்சியப்படுத்துகைக் கொள்ளளவுக்குக் குறைந்த பேரளவிலான பெற்றோலிய திரவ களஞ்சியப்படுத்துகை அல்லது திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு (எல்.பி. வாயு) களஞ்சியப்படுத்துகைகள் அல்லது நிரப்பும் வசதிகள். (பெற்றோலியம் மற்றும் திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு).

3. மாதம் ஒன்றிற்கு 1000 கிலோகிராமிற்கு குறைவானதும் மற்றும் அல்லது மாதம் ஒன்றிற்கு 200 கிலோகிராமுக்கு மேற்பட்டதுமான வெடிபொருட்கள் பயன்படுத்தப்படுகின்ற பட்டாசுகள் உள்ளடங்கலாக வானவெடிகள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

4. பத்துக்குக் குறைவான வேலையாட்கள் தொழிலுக்கமக்ஷத்தப்படுகின்ற, கண்ணாடியிழையை மூலப்பொருள் ஒன்றாகப் பயன்படுத்துவதில் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள்.

5. நாளொன்றுக்கு 50 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்டதும் நாளொன்றுக்கு 100 கிலோகிராமை விடக் குறைந்ததுமான உற்பத்தித்திறனைக் கொண்ட மணியிழை புகையூட்டிய இறப்பர் படைதட்டு உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

6. தொகுதியொன்றுக்கு 250 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்டதும் ஒரு மெற்றிக்தொன்னை விடக் குறைந்ததுமான உற்பத்தித்திறன் கொண்ட மரக்கரி உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

7. பத்து வேலையாட்கள் அல்லது அதற்கு மேற்பட்டதும் 25 வேலையாட்களை விடக் குறைந்ததுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற ஆயுர்வேத அல்லது சுதேச மருந்து உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதில் அல்லது பிரித்தெடுப்பதில் அல்லது வகுத்தமைப்பதில் சம்பந்தப்பட்டுள்ள கைத்தொழில்கள்.

8. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களையும் 10 வேலையாட்களுக்கு குறைவான வேலையாட்களையும் தொழிலுக்கமர்த்துகின்ற வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட பற்றிக் (சாயமிடல்) கைத்தொழில்கள்.

9. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களையும் 10 வேலையாட்களுக்கு குறைவான வேலையாட்களையும் தொழிலுக்கமர்த்துகின்ற அல்லது துப்பரவு செய்யும் திறன் நாளொன்றுக்கு 50 கிலோகிராமிற்கு (உலர்ந்த துணிகள்) குறைவாகவிருக்கின்ற வர்த்தக சலவைக்கூடங்கள்.

10. உலர்பதனீட்டுத் தொழிற்பாடுகள் கொண்ட தோல் பதனிடும் அல்லது முடிவுறும் கைத்தொழில்கள்.

11. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களையும் 25 வேலையாட்களுக்கு குறைவான வேலையாட்களையும் தொழிலுக்கமர்த்துகின்ற, இயற்கை இழையம் அல்லது தேங்காய் நாரினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள். (தேங்காய் நார் உலர்த்துதல், கட்டியாக்குதல் முதலியன)

12. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட இயந்திரங்களையும் 25 இயந்திரங்களுக்குக் குறைவான இயந்திரங்களையும் கொண்ட (பின்னல் அல்லது சித்திரத் தையல் தொழிற்சாலைகள் மொறுமொறுப்பூட்டுச் செயற்பாடுகள் இன்றி) சக்தித் தறிகள்.

13. சீனி உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள் அல்லது சுத்திகரிப்பு நிலையங்கள் அல்லது உள்நாட்டு கரும்பை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் நீங்கலாக கரும்பை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகக் கைத்தொழில்கள்.

14. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 50 வேலையாட்களைவிடக் குறைந்ததுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற சிகரட்டுக்கள் அல்லது புகையிலையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப்பொருட்களை உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

15. பத்து அல்லது அதற்குமேற்பட்டதும் 25 வேலையாட்களைவிடக் குறைந்ததுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற, உணவு உற்பத்திசெய்யும் அல்லது பதனிடும் கைத்தொழில்கள்.

16. இருநூற்றியைம்பது கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்டதும் 1000 கிலோகிராமை விடக் குறைவானதுமான நாளாந்த மாவு உள்ளீட்டுத் திறன் கொண்ட வெதுப்பகங்கள் அல்லது இனிப்புப்பண்ட தயாரிப்பிடங்கள்.

17. நாளொன்றிற்கு 5000 கிலோகிராமை விடக் குறைவான உற்பத்தித் திறனுடன் ஈரப்பதனிடுதல் கொண்ட அரிசி ஆலைகள்.

18. மாதமொன்றிற்கு 1000 கிலோகிராமுக்கு அதிகமான உற்பத்தித்திறன்கொண்ட அரைக்கும் ஆலைகள்.

19. நாளொன்றிற்கு 100 லீற்றர் அல்லது அதற்கு மேற்பட்டதும் 500 லீற்றரை விடக் குறைந்ததுமான உற்பத்தித்திறன் கொண்ட மதுசாரம் சாராத பானங்கள் உற்பத்திசெய்யும் அல்லது போத்தலில் அடைக்கும் கைத்தொழில்கள்.

20. நாளொன்றிற்கு 200 லீற்றர் அல்லது அதற்கு மேற்பட்டதும் 1000 லீற்றரை விடக் குறைந்ததுமான உற்பத்தித்திறன் கொண்ட தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.

21. தேங்காய் எண்ணெய் மற்றும் ஆயுர்வேத எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள் நீங்கலாக நாளொன்றிற்கு 10 லீற்றர் அல்லது அதற்கு மேற்பட்டதும் 30 லீற்றரை விடக் குறைந்ததுமான உற்பத்தித்திறன் கொண்ட வர்த்தக அடிப்படையிலான தாவர எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.

22. இருநூறு அல்லது அதற்கு மேற்பட்டதும் 500 கோழி முட்டைகளைவிடக் குறைந்ததுமான கோழிமுட்டைகள் குஞ்சு பொரிக்கப்படுகின்ற வித்து எல்லா குஞ்சு பொரிப்பகங்கள்.

23. எச்சந்தர்ப்பத்திலும் 500 அல்லது அதற்கு மேற்பட்டதும் 2500 முதிர்ச்சியடைந்த பறவைகளுக்குக் குறைந்ததுமான முதிர்ச்சியடைந்த பறவைகளைக் கொண்ட கோழிப்பண்ணைகள்.

24. எச்சந்தர்ப்பத்திலும் 10 அல்லது அதற்கு மேற்பட்டதும் 50 முதிர்ச்சியடைந்த விலங்குகளுக்குக் குறைந்ததுமான பன்றிப் பண்ணைகள் அல்லது மாட்டுப் பண்ணைகள்.

25. எச்சந்தர்ப்பத்திலும் 50 அல்லது அதற்கு மேற்பட்டதும் 250 முதிர்ச்சியடைந்த விலங்குகளுக்குக் குறைவானதுமான முதிர்ச்சியடைந்த விலங்குகளைக்கொண்ட ஆட்டுப் பண்ணைகள்.

26. எச்சந்தர்ப்பத்திலும் 500 அல்லது அதற்கு மேற்பட்டதும் 2500 முதிர்ச்சியடைந்த விலங்குகளுக்குக் குறைவானதுமான மொத்தத்தைக் கொண்ட கலவன் பண்ணைகள்.
*கலவன் பண்ணைக்கான தரப்படுத்துகை = கோழிகளின் எண்ணிக்கை + [50 x (பன்றிகளின் எண்ணிக்கை + மாடுகளின் எண்ணிக்கை)] + 10 x (ஆடுகளின் எண்ணிக்கை)]

27. எல்லா மீன் உயிரினப்பண்ணைகளும் அதன் பொரிப்பகங்களும்.

28. நாளொன்றிற்கு 0.5 அல்லது அதற்கு மேற்பட்ட மெற்றிக்தொன் மற்றும் 25 மெற்றிக்தொன்களுக்குக் குறைந்ததுமான உற்பத்தித்திறன் கொண்ட வர்த்தக மட்டத்திலான விலங்குத்தீனி உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

29. நாளொன்றிற்கு 10 அல்லது அதற்கு மேற்பட்ட லீற்றர்கள் மற்றும் 30 லீற்றருக்குக் குறைந்ததுமான உற்பத்தித்திறன் கொண்ட வர்த்தக மட்டத்திலான விலங்கு எண்ணெய்/கொழுப்பு பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.

30. எடையில் நாளொன்றுக்கு 5 மெற்றிக்தொன்களுக்கு குறைந்த அதிகபட்ச உள்ளீட்டுத் திறனைக் கொண்ட எரிசூளைகள்.

31. உடன் தேயிலை உற்பத்திசெய்யும் மற்றும் கலக்கும் கைத்தொழில்கள் நீங்கலான தேயிலைத் தொழிற்சாலைகள்.

32. நாளொன்றிற்கு 2000 அல்லது அதற்கு மேற்பட்டதும் 10000 கனமீற்றருக்கு குறைந்ததுமான பரிகரிப்புத் திறன்கொண்ட குடிநீர் பரிகரிப்புப் பொறித்தொகுதிகள்.

33. பனிக்கட்டி உற்பத்திசெய்யும் எல்லா கைத்தொழில்களும்.

34. நாளொன்றுக்கு 50 கனமீற்றருக்குக் குறைவான உற்பத்தித்திறன்கொண்ட கொங்கிறீற்று தொகுதியிடும் பொறித்தொகுதிகள்.

35. மாதமொன்றிற்கு 500 கனமீற்றருக்குக் குறைவான உற்பத்தித்திறன்கொண்ட ஒற்றைத்துளை தகர்ப்புடைய இயந்திர மயமாக்கப்பட்ட சுரங்கச் செயற்பாடுகள்.

36. நாளொன்றுக்கு 25 கனமீற்றருக்குக் குறைவான உற்பத்தித்திறன்கொண்ட இயந்திர கருங்கல் நொறுக்கும் அல்லது பதனிடும் கைத்தொழில்கள்.

37. தொகுதியொன்றுக்கு 20 அல்லது அதற்கு மேற்பட்ட மெற்றித்தொன் உற்பத்தித்திறன் கொண்ட (தோண்டியெடுக்கப்பட்ட பவளம் நீங்கலாக) சுண்ணாம்புச் சூளைகள்.

38. பத்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 25 வேலையாட்களுக்குக் குறைந்ததுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப் படுகின்றவிடத்து மட்பாண்டக் கைத்தொழில்கள்.

39. (வீட்டு மட்டத்தில் உரமாக்குதல் நீங்கலாக) எடையில் பத்து மெற்றிக்தொன்களுக்கு குறைவான நாளாந்த உள்ளீட்டுத் திறனைக்கொண்ட மாநகர திண்மக்கழிவு மற்றும் வேறு திண்மக்கழிவை உரமாக்கும் பொறித்தொகுதிகள்.

40. பத்து மெற்றிக்தொன்களுக்கு குறைவான நாளாந்த உள்ளீட்டுத் திறனைக்கொண்ட திண்மக்கழிவு (பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளடங்கலாக) மீள் பயன்பாடு/மீள் உருவாக்கம் அல்லது பதனிடும் பொறித்தொகுதிகள்.

41. (வீட்டு வசதிகள் நீங்கலாக) நாளொன்றுக்கு 10 மெற்றிக்தொன்களுக்கு குறைவான கழிவகற்றும் திறன்கொண்ட திண்மக்கழிவு அகற்றல் வசதிகள் அல்லது கழிவிடங்கள்.

42. நூறு அல்லது அதற்கு மேற்பட்டதும் 200 ஆட்களுக்குக் குறைந்ததுமான இருப்பாட்சி மட்டம் காணப்படுகின்றவிடத்து விடுதிகள் அல்லது அதனையொத்த வசிப்பிடங்கள்.

43. பத்து அல்லது அதற்குமேற்பட்டதும் 25 வேலையாட்களுக்குக் குறைந்ததுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற வதிவிட வசதிகள் இன்றிய ஹோட்டல்கள் அல்லது உணவு விடுதிகள் அல்லது வரவேற்பு மண்டபங்கள் அல்லது 20 அல்லது அதற்கு மேற்பட்டதும் 50 வேலையாட்களுக்குக் குறைந்ததுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற உணவு தயாரிக்கும் இடங்கள் அல்லது உணவு பரிமாறுதல் சேவை இடங்கள்.

44. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 20 அறைகளைவிடக் குறைந்ததுமான அறைகளைக் கொண்ட ஹோட்டல்கள் அல்லது உணவு விடுதிகள் அல்லது விருந்தினர் இல்லங்கள் அல்லது ஓய்வில்லங்கள்.

45. தீந்தை தெளித்தல் அல்லது அசையும் வளி சீராக்குதல் பழுதுபார்த்தல், நிறுவுதல் மற்றும் பேணுகைச் செயற்பாடுகள் உள்ளடங்கலாக வாகன பழுதுபார்த்தல் மற்றும் பேணுதல் நிலையங்கள்.

46. இருபத்தைந்து வேலையாட்களுக்குக் குறைவானவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்றவிடத்து தீந்தை தெளிக்கும் கைத்தொழில்கள் அல்லது 5 அல்லது அதற்கு மேற்பட்டதும் 25 வேலையாட்களுக்குக் குறைவானவர்களும் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற கடைசல் பட்டறைகள் அல்லது காய்ச்சிப் பொருத்தும் பட்டறைகள்.

47. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 25 வேலையாட்களுக்குக் குறைவானவர்களுமானவர்கள் தொழிலுக்கமர்த்தப் படுகின்றவிடத்து இயந்திரங்கள் பழுதுபார்க்கும் கைத்தொழில்கள்.

48. வளிச்சீராக்கிகள் வீட்டு குளிரூட்டிகளிலிருந்து குளிரூட்டுப் பதார்த்தங்களை மீள்பயன்பாடு செய்யும் அல்லது மீட்டெடுக்கும் நிலையங்கள்.

49. காற்றுப்பதனிடு கருவிகள் அல்லது குளிரூட்டிகளிலிருந்து பெறப்படும் குளிரூட்டுபொருட்களின் மீள்சுழற்சி அல்லது மீளப்பெறுகை நிலையங்கள்.

50. முச்சக்கரவண்டி அல்லது மோட்டார் சைக்கிள் பராமரிப்பு நிலையங்கள் அல்லது வர்த்தக மட்டத்திலான வாகனம் கழுவும் இடங்கள்.

51. எல்லா மீன்பிடித் துறைமுகங்களும்.

52. தகன அறைகள்.

53. ஐந்துக்குக் குறைவான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்றவிடத்து உலைகளுடனான வார்ப்பகங்கள்.

54. நாளொன்றிற்கு 25 அல்லது அதற்கு மேற்பட்டதும் 50 கனமீற்றருக்கு குறைவானதுமான ஆலைத்திறன் கொண்ட மர ஆலைகள் அல்லது 10 அல்லது அதற்கு மேற்பட்டதும் 25 வேலையாட்களை விடக்குறைவான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற மரக்கட்டை அடிப்படையிலான கைத்தொழில்கள்.

55. வேலைமாற்றம் ஒன்றிற்கு 50 அல்லது அதற்கு மேற்பட்டதும் 200 வேலையாட்களை விடக் குறைவானவர்களும் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற அட்டவணையின் இப்பாகம் இ இல் உள்ளடக்கப்படாத ஏதேனும் செயற்பாடு/கைத்தொழில்.

56. அட்டவணையின் பாகம் இ இல் உள்ளடக்கப்படாத ஏதேனும் செயற்பாடு/கைத்தொழிலின் உற்பத்திச் செய்முறையில் நாளொன்றிற்கு 3 அல்லது அதற்கு மேற்பட்டதும் 10 கனமீற்றருக்கு குறைந்ததுமான அதிகபட்சக் கொள்ளளவைக்கொண்ட கழிவுநீர் வெளியேற்றும் அத்தகைய ஏதேனும் செயற்பாடு/கைத்தொழில்.

**பாகம் ஈ**

1. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற மெழுகுவர்த்திகள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

2. ஐந்து வேலையாட்களுக்குக் குறைவானவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற, பற்றிக் (சாயமிடல்) கைத்தொழில்கள்.

3. ஐந்து வேலையாட்களுக்குக் குறைவானவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்றவிடத்து வர்த்தக சலவைக்கூடங்கள்.

4. பத்துக்கு மேற்பட்ட நெசவுத்தறிகள்/இயந்திரங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நெசவுத்தறிகள்/இயந்திரங்களைக் கொண்ட கைத்தறிகள் அல்லது பின்னல் அல்லது பூத்தையல் கைத்தொழில்.

5. நாளொன்றிற்கு 200 லீற்றருக்குக் குறைவான உற்பத்தித் திறன்கொண்ட வர்த்தகமட்ட தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.

6. தேங்காய் எண்ணெய் மற்றும் ஆயுர்வேத எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள் நீங்கலாக நாளொன்றுக்கு 10 லீற்றருக்குக் குறைவான உற்பத்தித்திறன் கொண்ட வர்த்தகமட்ட தாவர எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.

7. நாளொன்றிற்கு 100 லீற்றருக்குக் குறைவான உற்பத்தித் திறன்கொண்ட மதுசாரம் சாராத பானங்கள் உற்பத்திசெய்யும் அல்லது போத்தலில் அடைக்கும் கைத்தொழில்கள்.

8. நாளொன்றிற்கு 500 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தித் திறன்கொண்ட உலர் பதனிடுதல் தொழிற் பாடுகளைக் கொண்ட அரிசி ஆலைகள்.

9. மாதமொன்றுக்கு 1000 கிலோகிராமுக்கு குறைவான உற்பத்தித்திறன் கொண்ட அரைக்கும் ஆலைகள்.

10. பத்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 25 வேலையாட்களை விடக் குறைவானவர்கள் தொழிலுக்கமக்ஷத்தப்படுகின்றவிடத்து புகையிலைக் களஞ்சியங்கள் அல்லது சிகரட்டுக்கள் அல்லது புகையிலை தொடர்பான வேறு உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

11. தொகுதியொன்றுக்கு 250 அல்லது அதற்கு மேற்பட்ட கிலோகிராம் ஊட்டல் திறன்கொண்ட கந்தகத் தூமமூட்டுதலுடன் கறுவா தூமமூட்டும் கைத்தொழில்கள்.

12. ஐந்து வேலையாட்களுக்கு மேற்பட்டவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற சமையல் உப்பு பொதியிடும் மற்றும் பதனிடும் கைத்தொழில்கள்.

13. ஐந்து வேலையாட்களுக்கு மேற்பட்டவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற வர்த்தக அடிப்படையிலான தேயிலை கலத்தல்/ கலக்குதல் கைத்தொழில்கள்.

14. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 10 வேலையாட்களுக்குக் குறைவானவர்களுமான வேலையாட்கள் தொழிலுக் கமர்த்தப்படுகின்ற உணவு உற்பத்திசெய்யும் அல்லது பதனிடும் கைத்தொழில்கள்.

15. நாளொன்றுக்கு 250 கிலோகிராமை விடக் குறைவான மாவு உள்ளீட்டுத்திறன் கொண்ட வர்த்தக மட்டத்திலான வெதுப்பகங்கள் மற்றும் இனிப்புப்பண்ட தயாரிப்பிடங்கள்.

16. எச்சந்தர்ப்பத்திலும் 100 அல்லது அதற்கு மேற்பட்டதும் 500 முதிர்ச்சியடைந்த பறவைகளுக்குக் குறைந்ததுமான முதிர்ச்சியடைந்த பறவைகளைக் கொண்ட கோழிப்பண்ணைகள்.

17. எச்சந்தர்ப்பத்திலும் 05 அல்லது அதற்கு மேற்பட்டதும் 10 முதிர்ச்சியடைந்த விலங்குகளுக்குக் குறைந்ததுமான பன்றிப் பண்ணைகள் அல்லது மாட்டுப் பண்ணைகள்.

18. எச்சந்தர்ப்பத்திலும் 25 அல்லது அதற்கு மேற்பட்டதும் 50 முதிர்ச்சியடைந்த விலங்குகளுக்குக் குறைவானதுமான முதிர்ச்சியடைந்த விலங்குகளைக்கொண்ட ஆட்டுப் பண்ணைகள்.

19. 100 அல்லது அதற்கு மேற்பட்டதும் 500 முதிர்ச்சியடைந்த விலங்குகளுக்குக் குறைவானதுமான மொத்தத்தைக் கொண்ட கலவன் பண்ணைகள்.
*கலவன் பண்ணைக்கான தரப்படுத்துகை = கோழிகளின் எண்ணிக்கை + [50 x (பன்றிகளின் எண்ணிக்கை + மாடுகளின் எண்ணிக்கை)] + 10 x (ஆடுகளின் எண்ணிக்கை)]

20. 100 கனமீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட களஞ்சியப்படுத்துகைத் திறன் கொண்ட பழம் அல்லது மரக்கறிகள் அல்லது இறைச்சி அல்லது வேறு உணவு களஞ்சியப்படுத்துகைகள்.

21. கொங்கிறீற்று முன்வார்ப்பு கைத்தொழில்கள்.

22. இயந்திரமயமாக்கப்பட்ட சீமெந்துக் குற்றிகள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.

23. நாளொன்றுக்கு 20 மெற்றிக்தொன்களுக்குக் குறைவான உற்பத்தித்திறன் கொண்ட சுண்ணாம்புச் சூளைகள்.

24. ஐந்துக்கு மேற்பட்ட வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற "பரிசுச் சாந்தை" மூலப்பொருளாகப் பயன்படுத்தும் ஏதேனும் கைத்தொழில்.

25. சுண்ணாம்புச் சிப்பி நொறுக்கும்/கட்டியாக்கும் கைத்தொழில்கள்.

26. கூரை ஓடு மற்றும் செங்கல் சூளைகள்.

27. கண்ணாடி உருக்குதல் இன்றிய கண்ணாடிப்பொருட்கள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்.

28. கருங்கல் வெட்டும் மற்றும் மெருகேற்றும் கைத்தொழில்கள்.

29. வெடிபொருட்களைப் பயன்படுத்தி ஒற்றைத்துளை தகர்ப்புடன் கைவினைசார் சுரங்கந்தோண்டும் செயற்பாடுகள்.

30. நாளொன்றுக்கு 25 கனமீற்றருக்கு குறைவான ஆலைத் திறன்கொண்ட மர ஆலைகள் அல்லது 5 அல்லது அதற்கு மேற்பட்டதும் 10 வேலையாட்களுக்குக் குறைவானவர்களும் தொழிலுக்கமர்த்தப்படுகின்றவிடத்து மரக்கட்டை அடிப்படையிலான கைத்தொழில்கள்.

31. மரத்தை பருவப்படுத்துவதற்காக மரக்கட்டையின் போரோன் பரிகரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள கைத்தொழில்கள்.

32. பலநோக்குக் தச்சு இயந்திரங்களைப் பயன்படுத்தும் தச்சு வேலைத்தளங்கள்.

33. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 10 வேலையாட்களுக்குக் குறைவானவர்களுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற வதிவிட வசதிகள் இன்றிய ஹோட்டல்கள் அல்லது உணவு விடுதிகள் அல்லது வரவேற்பு மண்டபங்கள் அல்லது பத்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 20 வேலையாட்களுக்குக் குறைந்ததுமான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற உணவு தயாரிக்கும் இடங்கள் அல்லது உணவு பரிமாறுதல் சேவைகள்.

34. நாளொன்றில் 25 அல்லது அதற்கு மேற்பட்டதும் 100 ஆட்களுக்குக் குறைந்ததுமான இருப்பாட்சி மட்டம் காணப்படுகின்றவிடத்து விடுதிகள் அல்லது அதனையொத்த வசிப்பிடங்கள்.

35. தீந்தை தெளித்தல் அல்லது நடமாடும் வளிச்சீராக்கிகளை பழுதுபார்த்தல், பேணுதல் மற்றும் நிறுவுதல் நீங்கலாக வாகனப் பழுதுபார்த்தல் அல்லது பேணுதல் கராஜ்கள்.

36. வாகனப் பராமரிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் தவிர்ந்த கொள்கலன் சாலைகள்.

37. ஈயம் உருக்குதல் நீங்கலாக அச்சகங்களும் எழுத்து அச்சு இயந்திரங்களும்.

38. சடலங்களை நறுமணமூட்டிப் பாதுகாத்தலுடனான பிணவறைகள்.

39. வேலைமாற்றம் ஒன்றிற்கு 10 அல்லது அதற்கு மேற்பட்டதும் 50 வேலையாட்களை விடக் குறைவானவர்களும் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற மேலேயுள்ள இப்பட்டியலின் அட்டவணையின் பாகம் ஈ இல் உள்ளடக்கப்படாத ஏதேனும் செயற்பாடு/கைத்தொழில்.

சூழல் பாதுகாப்பு உரிமம் தேவைப்படுத்தப்பட்டவையும் 2008.01.25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான விதித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

EOG 01 - 0308

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.